# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் அமெரிக்காவிலுள்ள பென்சில்வேனியா - மாநாட்டுத் திடலில் 29.06.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

அல்ஹம்துலில்லாஹ். இன்று அஹ்மதிய்யா ஜமாஅத் அமெரிக்காவின் ஆண்டு மாநாடு ஆரம்பாகிறது. நான் இரண்டாவது முறையாக இதில் கலந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் எனக்கு கிடைத்துள்ளது. உலகின் பல்வேறு நாடுகளில் ஆண்டு மாநாட்டை அங்குள்ள ஜமாஅத்துகள் நடத்துகின்றன. இந்த மாநாடுகள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொடங்கிய அந்த மாநாட்டைப் பின்பற்றியே நடக்கின்றது. அதன் நோக்கம் ஜமாஅத் சகோதரர்களின் உலகமும் மறுமையும் சீராகும் வகையில் உண்மையான அருள்களின் வாரிசுகளாக அவர்கள் ஆவதற்கு காரணமாக இருக்கின்றது. அவற்றை அவர்கள் தங்களது வாழ்க்கையின் நிரந்தரமான பகுதியாக ஆக்கிக் கொண்டு இந்த அருள்களுக்கு வாரிசுகளாக ஆகிக்கொண்டே செல்வார்கள். இந்த அருள்கள் உண்மையான தக்வாவை கடைபிடிப்பதன் மூலம் கிடைக்கின்றது.

இந்த தரத்தை ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்ளும் ஒவ்வொரு நபரும் பெற வேண்டும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எதிர்பார்த்தார்கள். இந்த தரத்தைப் பெறுவதன் பக்கம் கவனம் செலுத்தாமல் இருப்பவர்களிடமிருந்து தாம் விலகி இருப்பதை அன்னார் வெளிப்படுத்திக் காட்டினார்கள். எனவே எங்கு இந்த மாநாடு அருள்களைக் கொண்டு வருகின்றதோ அங்கு ஓர் உண்மையான அஹ்மதிக்கு இது மிகவும் அச்சப்பட வேண்டிய ஓர் இடமாகும். அல்லாஹ் அவரை வருடத்தில் ஒருமுறை ஒரு குறிப்பிட்ட சூழலில் வைத்தவாறு தன்னை சீர்திருத்திக் கொள்வதற்கான ஒரு சந்தர்ப்பத்தை அவருக்கு வழங்கியுள்ளான். தனது பலவீனங்களை அகற்றிக் கொள்ள ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளான். தனது ஈமானையும் நிச்சய உறுதியையும் ஆராய்ந்தவாறு அவற்றைப் புதுப்பித்துக் கொள்ளவும் வலுப்படுத்தவும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளான்.

ஆனால் இவற்றைப் பெறுவதற்கு அதற்குரிய உரிமையை செலுத்தியவாறு முயற்சி செய்யப்படவில்லை. முயற்சி செய்யப்பட்டிருந்தாலும் தொடர்ந்து வரும் காலத்தில் அதனை அதற்குரிய இடத்தில் எவ்வாறு நிலைநிறுத்த வேண்டுமோ அவ்வாறு நிலைநிறுத்த முடியாமல் போய் விட்டது. மாநாட்டின் அருள்கள், பலன்கள் பற்றிய சரியான அறிவு ஓர் அஹ்மதிக்கு இருந்து அதை பெறுவதற்காக அவர் முயற்சியும் செய்தால் ஒவ்வொரு வருடமும் மாநாட்டில் கலந்து கொள்வதின் காரணமாக இந்த அருள்களையும் தூய மாற்றத்தையும் அவர்கள் ஒன்றுசேர்த்துக் கொண்டே செல்வார். அவ்வாறு செய்தால் ஒவ்வொரு வருடமும் தக்வாவில் முன்னேறி புதிய இலக்கை அடைவதை நாம் ஒவ்வொரு அஹ்மதியிடமும் பார்ப்போம். முன்னேற்றத்தின் இந்த இலக்குகள்தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மைப் பார்க்க விரும்பிய அந்த தகுதி வரை நம்மைக் கொண்டு செல்லும். எனவே, நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மை பார்க்க விரும்பிய அந்த தகுதி வரை நம்மைக் கொண்டு செல்லும்.

எனவே, நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது உள்ளத்திலிருந்த அந்த ஆசையின் பக்கம் கவனம் செலுத்த வேண்டிய தேவை இருக்கின்றது. அது மாநாட்டில் கலந்து கொள்பவர்கள் தொடர்பாக அவர்களது உள்ளத்திலிருந்த ஆசையாகும். ஆண்டு மாநாடுகளை நடத்துவது தொடர்பாக எந்த நோக்கம் அவர்களது உள்ளத்தில் இருந்ததோ அந்த நோக்கத்தை பெற வேண்டிய தேவை இருக்கின்றது. அதைப் பற்றி இந்த சொற்களிலும் அவர்கள் வெளிப்படுத்திக் கூறியுள்ளார்கள்.

கூறுகின்றார்கள்: இந்த உலகை விட அதிகமாக மறுமையின் பக்கம் கவனம் இருக்க வேண்டும்.

நமது கவனத்திலும், நாம் முன்னுரிமை வழங்கும் விசயங்களிலும் இந்த தரத்தைப் பெறுவதற்கு நீங்கள் உங்களிடம் தக்வாவை உருவாக்குங்கள் என்ற விசயத்தின் பக்கம் அவர்கள் மிக அதிகமாக வலியுறுத்திக் கூறி

வந்தார்கள். தக்வா என்பது அல்லாஹ்விற்கு செலுத்த வேண்டிய உரிமைகளை அவன் மீதுள்ள அச்சம், பயம் ஆகியவற்றை உள்ளத்தில் வைத்தவாறு செலுத்த வேண்டும். அவனது அடியார்களுக்குள்ள உரிமைகளையும் அல்லாஹ்வின் மீதுள்ள அச்சம், பயம் ஆகியவற்றை உள்ளத்தில் வைத்தவாறு செலுத்த வேண்டும். அல்லாஹ்விற்கு செலுத்த வேண்டிய உரிமைகளில் மிகப்பெரும் உரிமை இபாதத் ஆகும். இபாதத்தில் மிக முக்கியமான விசயம் தொழுகையாகும். அதைப் பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அது இறைவணக்கத்தின் சத்து ஆகும் என்று கூறியுள்ளார்கள். ஓர் உண்மையான நம்பிக்கையாளரின் இந்த கடமை, அல்லாஹ்விற்கு செலுத்த வேண்டிய இந்த உரிமை தொடர்பாக நான் கடந்த குத்பாவில் கொஞ்சம் கூறியிருந்தேன். அந்த குத்பாவை எவர்கள் கேட்கவில்லையோ அவர்கள் அதை கேட்க வேண்டும். தங்களது இறைவணக்கத்தின் குறைந்தபட்ச தரத்தையாவது பெற முயற்சி செய்ய வேண்டும். இந்த மாநாட்டில் உங்களுக்கு தொழுகைகளின் பக்கம் கவனம் இருக்கும் போது அல்லது சூழலின் காரணமாக எவ்வாறிருப்பினும் ஜமாஅத்தாக உங்களுக்கு தொழ வேண்டியது வருகின்ற போது பின்னர் அதனை உங்கள் வாழ்க்கையின் அங்கமாக ஆக்கிக் கொள்ளுங்கள். மாநாட்டு நாட்களில் குறிப்பாக இதற்காக துஆ செய்யுங்கள். இதற்காக முயற்சி செய்யுங்கள். அல்லாஹ் எல்லாருக்கும் தங்களது கடமையை, அல்லாஹ்விற்குரிய இந்த உரிமையை உண்மையான முறையில் செலுத்துவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

இங்கு ஒரு விசயத்தை விளக்க விரும்புகின்றேன். இங்கு மாநாட்டு நிகழ்ச்சிகள், தூரத்திலிருந்து வந்துள்ள பயணிகளின் வசதி ஆகியவற்றை கருத்தில் கொண்டு தொழுகைகளை நாம் சேர்த்து தொழுகின்றோம். ஷரீஅத் இதற்கான அனுமதியை வழங்கியுள்ளது. ஆனால், உங்கள் வீடுகளில் எவ்வித கட்டாய சூழலும் இல்லாத நிலையில் தொழுகைகளைச் சேர்த்து தொழுவதற்கான எந்த அனுமதியும் உங்களுக்கு இல்லை. சில வீடுகளில் நிரந்தரமாகவே தொழுகைகள் சேர்த்து தொழப்படுகின்றது எனத் தெரிகிறது. ஏனென்றால், குழந்தைகளிடம் ஒரு நாளில் எத்தனை தொழுகைகள் உள்ளன? என்று கேட்கும்போது அவர்களில் சிலர் மூன்று தொழுகைகள் என்று பதில் கூறுகின்றார்கள். இதிலிருந்தும் இந்த வீடுகளில் தொழுகைகள் முறையாக நிறைவேற்றப்படுவதில்லை என்று தெளிவாகத் தெரிகிறது.

திருக்குர்ஆன் ஐந்து தொழுகைகளை கடமையாக்கி இருக்கின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்களது நடைமுறை மூலம் ஐந்து தொழுகைகளுக்கான நேரங்களையும் கூறியுள்ளார்கள். அவற்றை எப்படி தொழ வேண்டும் என்று நடைமுறைப்படுத்தியும் காட்டியுள்ளார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீண்டும் மீண்டும் இதன் பக்கம் கவனமூட்டியுள்ளார்கள். கடந்த குத்பாவில் இதுபற்றிய விளக்கத்தை ஓரளவு நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது மேற்கோள்களின் ஒளியில் விளக்கிக் கூறியிருந்தேன். எனவே இந்த முக்கிய கடமையின் பக்கம் அதிகமாக கவனம் செலுத்துங்கள். பிறகு தக்வாவின் தரத்தை உயர்த்துவதற்காக, அல்லாஹ்வின் உரிமையை செலுத்துவதற்காக ஃபர்ளான இறைவணக்கங்கள் மட்டும் போதும் என்று இருக்கக் கூடாது. மாறாக, ஏனைய இறைவணக்கங்களை நிறைவேற்றுவதும் அவசியமானதாகும். பிறகு நஃபிலான இறைவணக்கங்கள் உள்ளன. அவற்றை நிறைவேற்றுவதும் அவசியமானதாகும். உங்களது தொழுகைகளை நஃபில்கள் மூலம் அழகுபடுத்துங்கள். தஹஜ்ஜுத் மற்றும் ஏனைய நஃபிலான தொழுகைகளின் பக்கம் கவனம் செலுத்துங்கள். இந்த மூன்று நாட்களில் பலருக்கும் தஹஜ்ஜுத் தொழுகையின் பக்கம் கவனம் ஏற்பட்டிருக்கும். அவ்வாறு கவனம் ஏற்படும் போது அதை வாழ்க்கையின் ஓர் அங்கமாக ஆக்கிக் கொள்ளுங்கள். ஏனென்றால், கடமையான விசயங்களில் உள்ள குறைபாடுகள் நஃபில்கள் மூலம் நிறைவடைகின்றது. நஃபிலான இறைவணக்கங்களில் தஹஜ்ஜுத் தொழுகைக்கு மிகுந்த முக்கியத்துவம் இருக்கின்றது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஜமாஅத்திற்கு இதன் பக்கம் அதிகமாக கவனமூட்டியுள்ளார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நமது ஜமாஅத் தஹஜ்ஜுத் தொழுகையை கண்டிப்பாக நிறைவேற்ற வேண்டும். எவரால் அதிகமாக தொழ முடியாதோ அவர் இரண்டு ரக்அத் மட்டும் தொழட்டும். எவ்வாறிருப்பினும்

அவருக்கு துஆ செய்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்து விடும். அந்த சமயத்தில் செய்யப்படும் துஆக்களில் ஒரு குறிப்பான தாக்கம் இருக்கின்றது. ஏனென்றால் அது உண்மையான உணர்வுடனும் வேதனையுடனும் வெளிப்படுகின்றது.

எதுவரை ஒரு குறிப்பான உருக்கமும், வேதனையும் உள்ளத்தில் இருக்காதோ அதுவரை ஒரு நபர் சுகமான தூக்கத்திலிருந்தும் எழுந்திருக்க முடியாது.

தூக்கத்திலிருந்து எழுவது அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக அவர் இந்த தியாகத்தை செய்துள்ளார் என்பதை காட்டுகின்றது.

கூறுகின்றார்கள்: இந்த சமயத்தில் எழுவது உள்ளத்தில் ஒரு வேதனையை உருவாக்கி விடுகிறது. அதன் மூலம் துஆவில் உருக்கம், நிம்மதியற்ற நிலை ஆகியவற்றின் நிலைமை உருவாகி விடுகின்றது. இந்த நிம்மதியற்ற நிலை, மன்றாடும் நிலை ஆகியவை தான் துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு காரணமாக இருக்கின்றன.

இதுதான் தஹஜ்ஜுத் தொழுகையின் முக்கியத்துவம் ஆகும். இதற்காக எழுவதே மனிதனிடம் ஒரு புரட்சிகரமான மாற்றத்தை உருவாக்கி விடுகின்றது. இன்றைய உலகில் பல்வேறு விசயங்களின் பக்கம் கவனம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக பெரும்பாலான மக்கள் இரவில் தாமதமாக உறங்குவதற்கு செல்கின்றனர். இந்த நிலையில் தஹஜ்ஜுது தொழ முயற்சி செய்வது நிச்சயமாக தக்வாவில் முன்னேறுவதற்கும் தூய மாற்றத்தை உருவாக்குவதற்கும் ஒரு மிகப்பெரும் வழியாகும்.

இந்த இறைவணக்கத்தை நிறைவேற்றுவது மனிதனுக்கு, எங்கு அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற்றுத் தருகின்றதோ அங்கு மனிதனின் பயனுக்காகவும் இது மிக வலுவான ஆயுதமாக இருக்கின்றது.

ஓர் உண்மையான நம்பிக்கையாளர், அல்லாஹ்வுக்குப் பிறகு அவர் செலுத்த வேண்டிய மிகப்பெரிய உரிமை, அவர் தனது சகோதரர்களுக்கு செலுத்த வேண்டிய உரிமையாகும். இது மனித நேயத்தின் உரிமையாகும் என்றே கூற வேண்டும். இவர் எந்த சமுதாயத்தைச் சார்ந்தவர்? எந்த மதத்தைச் சார்ந்தவர்? என்று பார்க்காமல் மனிதத்தன்மையை நிறைவேற்றுவதற்காக மற்றவர்களின் உரிமையை செலுத்த வேண்டும் என்று அல்லாஹ்வும் அவனது தூதர் (ஸல்) அவர்களும் மீண்டும் மீண்டும் போதனை செய்துள்ளார்கள்.

ஒரு நம்பிக்கையாளருக்கு இன்னொரு நம்பிக்கையாளரின் மீது இன்னும் அதிகமாக உரிமை இருக்கின்றது. இதுபற்றி குறிப்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வலியுறுத்தியவாறு போதனை செய்துள்ளார்கள். அந்த உரிமையை செலுத்த முயற்சி செய்ய வேண்டும். எனவே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மாநாட்டின் நோக்கங்கள் தொடர்பாக எடுத்துக் கூறியவாறு அடியார்களுக்குரிய உரிமைகளை செலுத்துவது தொடர்பாக அதிகமாக கவனமூட்டியுள்ளார்கள்.

கூறுகின்றார்கள்: மற்றவர்களுக்காக உங்களது உள்ளத்தில் பரிவு, மென்மை ஆகிவற்றை உருவாக்குங்கள். அனுதாபம் காட்டும் தன்மையை ஏற்படுத்துங்கள். இவை மாநாட்டின்போது மட்டும் இருப்பவையாக ஆகிவிடக் கூடாது. மாறாக பொதுவான வாழ்க்கையிலும் இதை வெளிப்படுத்த வேண்டும்.

சில நேரங்களில் சின்னச்சின்ன விசயங்களுக்காக சகோதரர்களுக்கிடையில் ஒருவர் மற்றவர் மீது வெறுப்படைகின்றனர். பல வருடங்கள் ஒருவர் மற்றவர் மீது வெறுப்புடன் இருப்பதை நான் பார்த்துள்ளேன். இந்த வெறுப்புணர்வு மற்ற உறவுகளிலும் தொற்றிக் கொள்கிறது. பிறகு இந்தப் பரிவு, மென்மை, அனுதாபம் காட்டுதல், ஒருவர் மற்றவரது உணர்வை கருத்தில் கொள்வது ஆகியவற்றிலுள்ள குறைவின் காரணமாக சில நேரங்களில் வீடுகளில் அனுதாபத்துடன் நடந்து கொள்வதிலும், அன்பு நேசம் கொள்வதிலும் குறைவு ஏற்படும் போது இதனால் குடும்பங்கள் சீர்குலைகின்றன. மேற்கத்திய உலகில் சுதந்திரம் இருக்கின்ற காரணத்தால்

வீடுகளில் நிம்மதியற்ற நிலை உள்ளது என்று நாம் ஒரு காலத்தில் கூறி வந்தோம். இங்கு தலாக்குகளின் விகிதாச்சாரம் மிக அதிகமாக இருக்கின்றது. கணவம் – மனைவி ஆகியோர் ஒருவர் மற்றவரது உணர்வை கருத்தில் கொள்வதில்லை. ஒரு காலக்கட்டம் கடந்த பிறகு மென்மையுடனும் அன்புடனும் நேசத்துடனும் ஒருவர் மற்றவருடன் பேசுவதை அவர்கள் விரும்புவதில்லை. ஆரம்பத்தில் இருந்து வந்த அன்பு இறுதியில் பகைமையாக, வெறுப்பாக மாறி விடுகின்றது. ஒருவருக்கு மற்றவர் மீது நம்பிக்கை இல்லாமல் இருப்பதுதான் இதற்கான காரணமாகும். நம்பிக்கை குறைந்து கொண்டே செல்கிறது. இதன் இறுதி விளைவு குடும்பம் சீர்குலைவதன் மூலம் வெளிப்படுகின்றது. இப்போது நமக்கும் கூட இது கவலை கொள்ள வேண்டிய நேரமாகும். அஹ்மதி வீடுகளிலும் நிம்மதியின்மை அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இதன் விளைவாக குடும்பங்கள் சீர்குலைகின்றன. இங்கிருந்தும் எனக்கு நீதித்துறையின் அறிக்கைகளும் ஜமாஅத்திலுள்ள சீர்திருத்தக் குழுக்களின் அறிக்கைகளும் வருகின்றன. பெரும்பாலான இடங்களில் தலாக் மற்றும் குலா ஆகியவற்றின் விகிதாச்சாரம் மிகவும் அதிகமாகிக் கொண்டே செல்கிறது.

ஒரு அஹ்மதிக்கு பரிவு, மென்மை, அனுதாபத்துடன் நடந்து கொள்வது ஆகியவற்றின் ஒவ்வொரு அம்சத்தையும் கைக்கொண்டு நடக்க வேண்டிய தேவை இருக்கின்றது. இதற்காக முயற்சி செய்ய வேண்டும். உங்களது எல்லையை விரிவாக்க வேண்டிய தேவை உள்ளது. அப்போதுதான் நாம் உண்மையான அஹ்மதிகளாக ஆக முடியும். எனவே, இந்த மாநாட்டிலும் இந்த அம்சத்தின் பக்கம் கவனம் செலுத்துங்கள். இதன் உயர்வான தரத்தை அடைய முயற்சி செய்யுங்கள். பிறகு இதில் நிலைத்திருப்பதற்கான உடன்படிக்கையை செய்து கொள்ளுங்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது கைகளில் அவர்களுக்கு முழுமையாகக் கட்டுப்பட்டு நடப்போம் என்று உடன்படிக்கை செய்திருப்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். தூய மாற்றங்களை உருவாக்கி தக்வாவில் நிலைநிற்பதற்கான உறுதிமொழியை நாம் புதுப்பித்துக் கொண்டோம். இதை எப்போதும் நாம் நமது கண்களுக்கு முன்னால் வைக்க வேண்டும். அவ்வாறில்லையென்றால், நாம் பைஅத் உடன்படிக்கையை நிறைவேற்றியவர்களாகவும் ஆகமாட்டோம். மாநாட்டின் அருள்களிலிருந்து பலன் பெறுபவர்களாகவும் நாம் இருக்கமாட்டோம்.

மாநாட்டில் நீங்கள் கூட்டுப் பாடல்களையும், நஸ்ம்களையும் படிக்கின்றீர்கள். நஸ்ம் பாடுவது ஆரம்பமாகி விடுகின்றது. இதனை M.T.A.ல் காட்டுவதால் இதில் மேலும் பொலிவை ஏற்படுத்த முயற்சிகள் செய்யப்படுகின்றன. அருள்களின் நாட்கள் வந்து விட்டன என மிகுந்த எழுச்சியுடனும் உணர்வுடனும் கூட்டுப்பாடல்கள் பாடப்படுகின்றன. அருள்களின் நாட்களிலிருந்து பலன் பெறுவதற்கு தக்வாவைப் பெற்றுக் கொள்வது அவசியமானதாகும். அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் போதனையை முழுமையாகப் பின்பற்ற வேண்டியது அவசியமானதாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் செய்த பைஅத் உடன்படிக்கையை நிறைவேற்றுவது அவசியமானதாகும். அவ்வாறில்லையென்றால் சந்தேகத்திற்கிடமின்றி நாள்கள் அருளுக்குரியவைதான். ஆனால் நாம் அந்த அருள்களிலிருந்து பலன்பெற முடியாது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியதைப் போன்று எங்கு நீங்கள் வந்தீர்களோ அங்கு நீங்கள் பெற வேண்டிய உலகப் பலன்களைப் பெற்ற பிறகு அங்கிருந்து சென்று விட்டீர்கள் என்று கூறும் வகையில் இது ஒரு உலகத்திருவிழா அல்ல. மாறாக, இதன் உண்மையான அருள்களிலிருந்தும் பயனடைய முயற்சி செய்யுங்கள். இதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மிடம் என்ன விரும்புகின்றார்கள்? இது தொடர்பாக அவர்கள் கூறியுள்ள சில விசயங்களை நான் உங்கள் முன்னால் எடுத்துக் கூறுகின்றேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்ற ஒவ்வொரு விசயத்திற்கேற்ப செயல்படுபவர்கள்தான் இறைவனோடு ஒன்றியுள்ள மனிதர்களாக ஆக முடியும். மேலும் இதுவே அவர்களது வருகையின் நோக்கமாகும். தனது எஜமானரான ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் சென்றவாறு மனிதர்களை இறைவனோடு ஒன்றியுள்ள மனிதர்களாக உருவாக்குங்கள்.

முதலாவதாக நான், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது சொற்களில் அவர்களது உயர் தகுதி, அதன் முக்கியத்துவம், அவர்களுக்கு முழுமையாகக் கட்டுப்படுவது ஆகியவற்றைப் பற்றி கூறுவேன்.

கூறுகின்றார்கள்: நீங்கள் எனது கைகளில் பைஅத் செய்துள்ளீர்கள். என்னை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்றும், நீதியுடன் தீர்ப்பளிப்பவர் என்றும் ஏற்றுக் கொண்டுள்ளீர்கள். இவ்வாறு ஏற்றுக் கொண்ட பிறகு எனது ஏதாவதொரு தீர்ப்பு அல்லது செயல் மீது உங்களுக்கு ஏதாவது சந்தேகம் அல்லது துக்கம் ஏற்படுகிறதென்றால் நீங்கள் உங்கள் ஈமான் பற்றி கவலைப்படுங்கள். எந்த ஈமான் அபாயங்கள் மற்றும் யூகங்களால் நிறைந்துள்ளதோ அது எந்த விளைவையும் ஏற்படுத்தக் கூடியதாக இருக்காது. ஆனால், நீங்கள் உண்மையான உள்ளத்துடன் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் உண்மையிலேயே நீதியுடன் தீர்ப்பளிப்பவர் என்பதை ஏற்றுக் கொண்டுள்ளீர்கள் என்றால் பிறகு அவரது கட்டளை மற்றும் செயலுக்கு முன்னால் சரணடைந்து விடுங்கள். அவரது தீர்ப்புகளை கண்ணியமிக்க பார்வையுடன் பாருங்கள். அதன் மூலம் நீங்கள் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது தூய வார்த்தைகளுக்கு கண்ணியமளித்து அதன் மகத்துவத்தைப் புரிந்து கொண்டவர்களாக ஆவீர்கள். அவர் உங்களது இமாமாக இருப்பார். உங்களுக்கு நீதியுடன் தீர்ப்பு வழங்குவார் என்று கூறிய ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது சாட்சியமே போதுமானதாகும்.

எனவே அவர்கள் கூறும் ஒவ்வொரு விசயத்தையும் நாம் முழுமையாகப் பின்பற்றுவதற்கு முயற்சி செய்யும் போதுதான் அவர்களது தீர்ப்புகளை கண்ணியமிக்க பார்வையுடன் பார்ப்பவர்களாக நாம் ஆவோம். அவர்கள் கூறும் விசயங்களை கண்ணியமிக்க பார்வையுடன் பார்ப்பதுடன், அதற்கேற்ப செயல்படுபவர்கள், அவர்கள் கூறும் விசயங்களுக்கு மட்டும் கண்ணியம் அளிப்பவர்கள் அல்ல. மாறாக, பெருமானார் (ஸல்) அவர்களது கூற்றுக்களை கண்ணியத்துடனும் மிக உயர்ந்த நிலையிலும் பார்ப்பவர்களாக அவர்கள் உள்ளனர் என்பதை அவர்கள் தெளிவாகக் கூறிவிட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ள ஒவ்வொரு விசயத்தையும் திறந்து நமக்கு எடுத்துக் கூறியுள்ள அந்த இமாமை ஏற்றுக் கொண்டது நமது நற்பாக்கியமாகும். அதன் மூலம் நமக்கு புரிந்து கொள்வதில் தவறு ஏற்பட்டுள்ளது என்று எவராலும் கூற முடியாது.

ஓர் அஹ்மதி பைஅத் செய்யும் போது அவர் தமது பொறுப்புகள் மீது எப்போதும் தனது பார்வையைச் செலுத்துவது அவசியமானதாகும். உலக விருப்பங்கள், உலக விசயங்களுக்காக நாம் தருகின்ற முன்னுரிமைகள் பைஅத் உடன்படிக்கையிலிருந்தம் நம்மை தொலைவில் கொண்டு செல்கின்றன. உண்மையில் அப்படிப்பட்ட நபரது பைஅத் உடன்படிக்கையானது பைஅத் உடன்படிக்கையாக இருக்காது. எனவே, மாநாட்டின் இந்த நாட்களில் இந்த அம்சம் தொடர்பாகவும் ஒவ்வொரு அஹ்மதியும் தம்மை ஆய்வு செய்து பார்க்க வேண்டியது அவசியமானதாகும்.

**ஜமாஅத்திற்குப் போதனை செய்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இறைவன் இந்த இயக்கத்தை நிலைநாட்டியுள்ளான். இதற்கு ஆதரவாக அவன் நூற்றுக்கணக்கான அடையாளங்களை வெளிப்படுத்திக் காட்டியுள்ளான். இதன் மூலம் இந்த ஜமாஅத் சஹாபாக்களின் ஜமாஅத்தாக ஆக வேண்டும் என்பதே அவனது நோக்கமாகும். பிறகு ஆரம்ப காலத்திலிருந்த சிறந்த நூற்றாண்டுகளின் காலம் மீண்டும் வர வேண்டும். எந்த மக்கள் இந்த இயக்கத்தில் இணைகின்றார்களோ அவர்கள் ஆகரீன மின்ஹும் எனக் கூறப்பட்டவர்களாக இருப்பதால் அவர்கள் தமது பொய் தோற்றங்களின் ஆடைகளைத் களைந்து விட வேண்டும். மேலும் தங்களது முழு கவனத்தையும் இறைவன் பக்கம் செலுத்த வேண்டும்.

நமக்கு இறைவன் வாக்களிக்கப்பட்ட மஸீஹிற்குப்பிறகு கிலாஃபத்தின் நிரந்தரமான தொடர் நிலைத்திருக்கும் என்ற நற்செய்தியை வழங்கியுள்ளான். இதன் அருள்களிலிருந்து பலன் பெறுவதற்கு ஆரம்பகால சிறந்த நூற்றாண்டுகளின் காலத்தை நிலைத்திருக்கச் செய்வதற்கான முயற்சிகளைச் செய்து கொண்டே செல்ல வேண்டும். ஒரு தலைமுறைக்குப் பிறகு அடுத்த தலைமுறையிடம் இந்த ஆன்மாவை ஊத

வேண்டும். ஊதிக் கொண்டே இருக்க வேண்டும். நாம் நமது ஒவ்வொரு சொல்லையும் செயலையும் இறைவனது திருப்திக்கேற்ப வடிவமைத்துக் கொள்ள வேண்டும் என்பதை அவர்களுக்கு உணர்த்த வேண்டும். இது நடக்கவில்லையென்றால் பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறிய அந்த சிறந்த காலத்தை விரும்புபவர்களாக இருக்க மாட்டோம். மாறாக, இருள்களின் காலக்கட்டத்தில் மூழ்கி விடுவோம். எனவே, இதற்காக முயற்சி செய்வது மிகவும் அவசியமானதாகும்.

பிறகு அவர்கள் கூறுகின்றார்கள்: எங்கு என்னை ஏற்றுக் கொண்டவர்களிடத்தில் அல்லாஹ்வை நினைவு கூர்வதில் ஒரு சிறப்பான நிறம் தென்படுமோ அங்கு அவர்களில் ஒருவருக்கொருவர் வெளிப்படுத்தும் அன்பிலும் நேசத்திலும் ஒரு சிறப்பான தன்மை இருக்க வேண்டும். அல்லாஹ்வை நினைவு கூர்வதில் மட்டும் சிறப்பான நிறம் தென்படக் கூடாது. மாறாக, தமக்கிடையே இருக்கின்ற உறவுகளில், தொடர்புகளில், ஜமாஅத்திற்குள் அன்பு, நேசம் கொள்வதில் ஒரு சிறப்பான நிறம் இருக்க வேண்டும்.

இதையே தன்னை ஏற்றுக் கொண்டவர்களிடத்தில் அவர்கள் எதிர்பார்த்தார்கள். இந்த தன்மை உருவானால் தான் நாம் (ஆகரீன்) பின்னவர்களின் ஜமாஅத்தாக ஆக முடியும். தமக்கிடையே உள்ள அன்பு நேசத்தை மேலும் விரிவுபடுத்தியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இறை அடியார்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகள் தொடர்பாக நமக்கு கவனமூட்டியுள்ளார்கள். எவ்வாறு அவர்கள் நமக்கு கவனமூட்டியுள்ளார்களோ அவ்வாறே நம்மில் ஒவ்வொருவரும் அவரவருக்குரிய உரிமைகளைச் செலுத்துபவர்களாக ஆகி விட்டால் நாம் சில வருடங்களில் ஒரு புரட்சியை உருவாக்க முடியும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மனித இனத்துடன் அனுதாபத்துடன் நடந்து கொள்வதில் எனது வழிமுறை என்னவென்றால் எதுவரை எதிரிக்காக துஆ செய்வதில்லையோ அதுவரை முழுமையான முறையில் நெஞ்சம் தூய்மையடையாது.

பாருங்கள்! நம்மில் எத்தனை பேர் இந்த சிந்தனையுடன் நமது துஆக்களை விரிவுபடுத்துகிறோம்? இந்த சிந்தனை இருந்தால் ஜமாஅத்தில் ஏற்படுகின்ற சில பிரச்சனைகள் ஒருபோதும் ஏற்படாது. ஒரு நம்பிக்கையாளர் தனது எதிரிக்கும், பகைவருக்கும், மூஃமின் அல்லாதவருக்கும் துஆ செய்கின்ற போது நம்மவர்களுக்காக அவரது துஆக்கள் மேலும் அதிரிக்கும். அதில் உணர்வு ஏற்படும். பிறகு இறைவனின் அன்பின் பார்வையும் அத்தகைய அன்பு கொள்பவர் மீதும், பிறரது உணர்வுகளுக்கு மதிப்பளிப்பவர்கள் மீதும் படுகின்றது. எவர் மீது அல்லாஹ்வின் அன்பின் பார்வை படுகின்றதோ அவரது உலகம், மறுமை ஆகிய இரண்டும் சீராகி விடும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இந்த முக்கியமான போதனையையும் எப்போதும் நாம் நமது கண்முன் வைத்திருக்க வேண்டும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: உங்கள் மீது இறைவனின் மாபெரும் அருள் இருக்கின்றது. அவன் உங்களுக்கு ஆற்றலை வழங்கி அடையாளம் கண்டு கொண்டும் கண்களையும் வழங்கியுள்ளான். அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொள்ளும் நற்பாக்கியத்தை அவன் உங்களுக்கு வழங்கினான்.

கூறுகின்றார்கள்: அவன் உங்களுக்கு இந்த அருளை வழங்காமல் இருந்திருந்தால், எவ்வாறு மற்ற மக்கள் ஏசிப் பேசிகின்றனரோ அவ்வாறே நீங்களும் அவர்களைச் சார்ந்தவர்களாக இருந்திருப்பீர்கள். எந்த விசயம் உங்களை ஈர்த்துள்ளதோ அது முழுக்க முழுக்க அல்லாஹ்வின் அருளாகும்.

கூறுகின்றார்கள்: நாம் முஸ்லிம்களாக இருக்கின்றோம் என்று நினைக்காதீர்கள். இஸ்லாம் மிகப்பெரிய அருளாகும். இதற்கு மதிப்பளியுங்கள். மேலும் நன்றி செலுத்துங்கள்.

பெயரளவில் முஸ்லிம் ஆவதும் அஹ்மதி ஆவதும் ஒரு விசயமே அல்ல. இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டதால் கிடைத்துள்ள இறைவனின் அருள்தான் அசல் விசயமாகும். அதற்கு கண்ணியமளிப்பது அவசியமானதாகும். அதற்கு எப்படி கண்ணியம் அளிக்க முடியும்?

அவர்கள் கூறுகின்றார்கள்: இதில் தத்துவம் அடங்கியுள்ளது. அது நாவால் கூறியதால் மட்டும் கிடைத்து விடாது. அல்லாஹ்வின் எல்லா விதமான ஆதிக்கத்தின் கீழ் வந்து விடுவதன் பெயர்தான் இஸ்லாம் ஆகும்.

இதன் சுருக்கம் இறைவனுக்கு உண்மையான முறையில் முழுமையான முறையில் கீழ்படிந்து நடப்பதில் அடங்கியுள்ளது. தனது அனைத்தையும் இறைவன் முன்னால் வைத்து விடுபவரே முஸ்லிம் ஆவார்.

இந்த நிலையை ஒரு நம்பிக்கையாளர் அடையும் போது அதுபற்றி கூறுகின்ற ஒரு திருக்குர்ஆன் வசனத்தை அவர்கள் எடுத்துரைத்துள்ளார்கள். அதில் அல்லாஹ் கூறுகின்றான்:

ஏன் இல்லை? எவர் தன்னை முழுமையாக இறைவனிடம் ஒப்படைத்து அவர் நன்மை செய்பவராக இருந்தால் அவரது கூலி அவரது இறைவனிடம் இருக்கின்றது. அவர்கள் மீது எவ்வித அச்சமும் இருக்காது. அவர்கள் துயரப்படவும் மாட்டார்கள்.

அல்லாஹ் இந்த வாக்குறுதியை வழங்குகின்றான். எவர் தனது முழு கவனத்தையும் அல்லாஹ்வின் மீது வைக்கின்றாரோ, அல்லாஹ்வின் திருப்திக்கு மற்ற எல்லா பொருள்களை விடவும் முன்னுரிமை வழங்குகின்றாரோ, அவர்களது அச்சம் மற்றும் துக்கத்தின் நிலைமையை அல்லாஹ் அகற்றி விடுகின்றான்.

இஹ்ஸான் என்பதன் பொருள் மற்றவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வதாகும். அவ்வாறு நடந்து கொள்வதில் எவ்வித சுய இலாபமும் இருக்கக் கூடாது. தனது அறிவிலும் செயலிலும் நன்மை செய்வதை கருத்தில் கொள்வது என்ற பொருளும் இதற்கு இருக்கின்றது. மனிதன் தனது ஒவ்வொரு செயல், அவன் பெற்ற அறிவு ஆகியவற்றை நன்மையான விசயங்களுக்காக பயன்படுத்த வேண்டும். எவ்வகையிலும் அதில் தீமை நுழைந்து விடக்கூடாது. இந்த நிலைதான் உண்மையில் முழு கவனமும் அல்லாஹ்வின் பக்கம் இருந்தது என்ற நிலையாகும். இத்தகைய உயர் தகுதியைப் பெற ஒவ்வொரு அஹ்மதியும் முயற்சி செய்ய வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இந்த நிலைதான் நம்மை உண்மையான முஸ்லிம்களாக உருவாக்குகின்றது. நாம் பைஅத் மூலம் இணைந்த பிறகு இதனால் மகிழ்ச்சி அடைந்து விடக் கூடாது. இதுவே போதும் என்று இருந்து விடக் கூடாது. மாறாக தனது தரத்தை உயர்த்திக் கொண்டே செல்வதற்கு முயற்சிகள் செய்து கொண்டிருக்க வேண்டும்.

**பைஅத் செய்தவர்களின் நற்பாக்கியம் தொடர்பாக அவர்கள் கூறுகின்றார்கள்:**

நான் உண்மையை கூறுகின்றேன். நற்பாக்கியம் பெற்றவர்களுக்காக அல்லாஹ் உருவாக்கியுள்ள ஒரு வாய்ப்பாக இது இருக்கின்றது. அதாவது அந்த மக்கள் அஹ்மதிய்யத்தில் இணைந்து விட்டனர். இதிலிருந்து பயன் பெறுபவர்கள்தான் அருளுக்குரியவர்கள ஆவர். என்னுடன் தொடர்பை உருவாக்கியுள்ள நீங்கள் இந்த விசயத்தால் ஒருபோதம் கர்வம் கொள்ளாதீர்கள். நீங்கள் எதைப் பெற வேண்டுமோ அதை பெற்று விட்டீர்கள் என்று நினைத்து விடாதீர்கள். இந்த மறுப்பவர்களை விட நீங்கள் நற்பாக்கியத்திற்கு மிக அருகில் இருப்பவர்கள் ஆவீர்கள் என்பது உண்மைதான். இந்த மறுப்பவர்கள் தங்களது வலுவான மறுப்பு, இழிவான செயல் ஆகியவற்றால் இறைவனை வெறுப்படையச் செய்துள்ளனர். நீங்கள் நல்லெண்ணம் கொண்டு இறைவனது கோபத்திலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் கவலையில் இருந்தீர்கள் என்பதும் உண்மையாகும். ஆனால் உண்மையான விசயம் எதுவென்றால், நீங்கள் அந்த நீரூற்றின் அருகில் வந்து சேர்ந்து விட்டீர்கள். அதனை அல்லாஹ் இந்த சமயத்தில் உங்களது நிரந்தரமான வாழ்விற்காக உருவாக்கியுள்ளான்.

அதிலிருந்தும் தண்ணீர் அருந்துவது எஞ்சியுள்ளது. இறைவனது கருணையாலும் அருளாலும் அவன் உங்களது தாகத்தை தணிப்பதற்கு அவனிடம் அதற்கான நல்வாய்ப்பை கேளுங்கள். ஏனென்றால் இறைவன் இல்லாமல் எதுவும் நடக்காது; நீங்கள் தண்ணிர் குடிக்க முடியாது. அதாவது அஹ்மதிய்யத்தில் நுழைந்த பிறகும் அதிலிருந்து பலன்பெற முடியாது.

கூறுகின்றார்கள்: நான் உறுதியாக அறிவேன். யார் இந்த நீரூற்றிலிருந்தும் அருந்துவாரோ அவர் அழியமாட்டார். ஏனென்றால் இந்த தண்ணீர் வாழ்வை வழங்குகிறது. அழிவிலிருந்தும் காப்பாற்றுகின்றது. ஷய்த்தானின் தாக்குதல்களிலிருந்தும் பாதுகாக்கின்றது. இந்த நீரூற்றிலிருந்தும் வயிறு நிறைய தண்ணிர் குடிப்பதற்கான வழிமுறை என்ன? அது இறைவன் உங்கள் மீது நிலைநாட்டியுள்ள இரு உரிமைகளை நிறைவேற்றுவதாகும். அந்த உரிமைகளை முழுமையாக செலுத்துங்கள். அவற்றில் ஒன்று, இறைவனுக்குள்ள உரிமையாகும். மற்றொன்று, படைப்பினங்களுக்குரிய உரிமையாகும். இதுதான் அந்த நிலையாகும். அந்த தகுதியாகும். அதை உருவாக்குவது நம்மில் ஒவ்வொருவருக்கும் அவசியமானதாகும்.

இதுவும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மீது செய்துள்ள ஓர் அருளாகும். இந்த உயர்வான தரத்தைப் பெறுவதற்காக ஆண்டு மாநாட்டின் வடிவில் ஒரு வாய்ப்பை நமக்கு அவர்கள் ஏற்படுத்தித் தந்துள்ளார்கள். அங்கு நாம் நல்ல விசயங்களை கேட்டும், ஒருவர் மற்றவரிடமுள்ள நல்ல தாக்கங்களை ஈர்த்தும் அவர்கள் நம்மிடம் பார்க்க விரும்புகின்ற அந்த தரத்தைப் பெறுவதன் பக்கம் கவனம் செலுத்துகின்றோம். பிறகு இன்னொரு முக்கியமான விசயத்தின் பக்கம் அவர்கள் நமக்கு கவனமூட்டியுள்ளார்கள். ஒவ்வொரு அஹ்மதியும் இதன் பக்கம் மிக அதிகமாக கவனம் செலுத்த வேண்டியது அவசியமானதாகும். அது நமது அறிவின் நிலையை சிறப்பானதாக ஆக்குவதாகும். இன்றைய சமுதாயத்தில் உலகக் கல்வியைப் பெறுவதன் பக்கம் அதிகமாக கவனம் இருக்கின்றது. மார்க்கத்தைக் கற்றுக் கொள்வதன் பக்கம் குறைவான கவனம் உள்ளது.

அவர்கள் கூறுகின்றார்கள்: உண்மையான மாற்றத்தையும், தக்வாவையும், தூய்மையையும் உருவாக்குவதற்கு தமது மார்க்க அறிவை வளர்த்துக் கொள்வது அவசியமானதாகும்.

இந்த மார்க்க அறிவு நமக்கு இன்று முழுக்க முழுக்க ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடமிருந்து மட்டுமே கிடைக்க முடியும். அவர்கள் தமது நூல்களின் எண்ணற்ற பொக்கிசங்களை நமக்காக விட்டு விட்டு சென்றுள்ளார்கள். அவை அறிவு மற்றும் இறைஞானத்தின் முத்துக்களால் நிரம்பியிருக்கின்றன.

எனவே இவற்றை படிப்பதன் பக்கம் மிக அதிகமாக கவனம் செலுத்த வேண்டியது மிகவும் அவசியமானதாகும். எந்த நூல்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதோ அவற்றை உருது தெரியாதவர்கள் படிப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். சில மேற்கோள்கள் உள்ளன. அவற்றை படிப்பதன் பக்கம் கவனம் செலுத்துங்கள். அவை 5 பாகங்களாக வெளிவந்து விட்டன. உருது படிக்கத் தெரிந்தவர்கள் உருதுவில் அவற்றை படிக்க வேண்டும். இந்த விசயங்கள் நமது அறிவையும் இறைஞானத்தையும் வளர்ப்பதற்கான மிகப்பெரிய வழியாகும். ஏனென்றால், எவற்றையெல்லாம் அவர்கள் கூறியுள்ளார்களோ அவை திருக்குர்ஆனின் விளக்கவுரையேயாகும். இந்தக் காலத்தில் எல்லாரையும் விட அதிகமாக திருக்குர்ஆனின் அறிவை அல்லாஹ் அவர்களுக்கே வழங்கியுள்ளான்.

**திருக்குர்ஆனை அதிகமாக படிப்பது பற்றி அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

இறைவன் தனது அருளால் திருக்குர்ஆன் ஓர் உயிருள்ள ஒளிமயமான வேதமாகும் என்பதை நமக்கு தெளிவாகத் தெரிவித்துள்ளான்.

கூறுகின்றார்கள்: என்னுடன் தொடர்புள்ள அந்த மக்களுக்கு நான் மீண்டும் மீண்டம் போதனை செய்கின்றேன். இறைவன் இந்த இயக்கத்தை உண்மைகளை வெளிப்படுத்துவதற்காக நிறுவியுள்ளான். இது இல்லாமல் செயல் அளவிலுள்ள வாழ்க்கையில் எந்த பிரகாசமும் ஒளியும் உருவாகாது. திருக்குர்ஆனின் அறிவு இருந்தால் தான் உண்மைகள் வெளிப்படும். இது இல்லாமல் வாழ்வில் எந்த ஒளியும் ஏற்படாது. மார்க்க அறிவைப் பெற முடியாது.

கூறுகின்றார்கள்: செயலளவிலான உண்மை மூலம் இஸ்லாத்தின் சிறப்பு உலகில் வெளிப்பட வேண்டும் என்றே நான் விரும்புகின்றேன். இறைவன் இந்தப் பணிக்காகவே என்னை நியமித்துள்ளான். எனவே, திருக்குர்ஆனை அதிகமாக ஓதுங்கள். ஆனால் அதை ஒரு கதை என்று கருதாமல் அதை ஒரு தத்துவமாகக் கருதிப் படிக்க வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் தன்னை அல்லாஹ் நியமித்துள்ள இந்த முக்கியமான பணியுடன் தன்னை ஏற்றுக் கொள்பவர்களுக்கும் இதன் பக்கம் கவனமூட்டியுள்ளார்கள். எனவே, திருக்குர்ஆனை நாம் புரிய வேண்டும். அதை படிக்க வேண்டும். அதன் அழகையும் சிறப்பையும் இந்த மக்களுக்கு வெளிப்படுத்தும் வகையில் அதனை அவர்களுக்கு எட்ட வைப்பது நமது பணியாகும்.

இந்த சமயத்தில் நம்மிடமுள்ள தப்லீகிற்கான எல்லாவற்றையும் விட மிகப்பெரிய ஆயுதம் திருக்குர்ஆனாகும். இளைஞர்களும் மற்றவர்களும் எவ்வகையிலும் தாழ்வு மனப்பான்மை கொள்ள வேண்டிய தேவையில்லை. முஸ்லிம்களுக்கு எதிராகவும் திருக்குர்ஆனுக்கு எதிராகவும் விசயங்கள் பேசப்படும்போது நாம் எப்படி இந்த ஆயுதத்தை பயன்படுத்த முடியும்? என்று கருத வேண்டாம். இந்த ஆயுதம் தான் எல்லா மார்க்கங்களின் மீதும் நாம் வெற்றி அடைவதற்கான ஆயுதமாகும். இதை நாம் கற்க வேண்டும். மற்றவர்களுக்கு எட்ட வைக்க வேண்டும். இதைப் படித்துப் புரிந்து இதன் மூலமாக ஆட்சேபனை செய்பவர்களின் வாயை அடைப்பது நமது பொறுப்பாகும்.

இங்கு ஒவ்வொரு நாளும் திருக்குர்ஆன் மீதும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும் இழிவான ஆட்சேபனைகள் செய்யப்படுகின்றன. அந்த ஆட்சேபனைகளை அகற்றுவது இன்று நமது பொறுப்பாகும். இது சில மக்களின் பணி மட்டுமல்ல. குத்தாமுல் அஹ்மதிய்யாவின் மூலமோ அல்லது சில மக்கள் மூலமாகவோ அல்லது மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ் சுல்தானுல் கலம் நிறுவப்பட்டு விட்டதனாலோ இவை மட்டும் போதுமானது என்று நாம் கருத முடியாது. மாறாக ஒவ்வொரு அஹ்மதி சிறுவர், பெரியவர், ஆண், பெண் ஆகியோர் இதன் பக்கம் கவனம் செலுத்துவது அவசியமானதாகும். அதன் மூலம் நம்மில் ஒவ்வொருவரும் இஸ்லாத்தின் உண்மையான தூதுச் செய்தியை எட்ட வைப்பவர்களில் ஒருவராக அதில் பங்குபெற முடியும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இந்த ஜமாஅத்தில் இணைந்ததால் உங்களிடம் ஒரு தனித்தன்மை இருக்க வேண்டும். நீங்கள் முற்றிலும் ஒரு புது வாழ்க்கை நடத்துகின்ற மனிதனாக ஆகிவிட வேண்டும். இதற்கு முன்பு நீங்கள் எப்படி இருந்தீர்களோ அவ்வாறு இப்போது இருக்கக் கூடாது. இறைவழியில் நீங்கள் உங்களை மாற்றிக் கொள்வதால் நீங்கள் தேவை உடையவராக ஆகி விடுவீர்கள் என்றோ உங்களுக்கு பல எதிரிகள் உருவாகி விடுவர் என்றோ நினைக்காதீர்கள். இறைவனது கரங்களைப் பற்றிப் பிடிப்பவர் ஒருபோதும் தேவை உடையவராக ஆவதில்லை. அவர் மீது ஒருபோதும் கெட்ட நாட்கள் வராது. இறைவன் யாருக்கு நண்பனாகவும் உதவி செய்பவனாகவும் இருக்கின்றானோ அவருக்கு முழு உலகமும் எதிரியாக ஆகிவிட்டாலும் அவருக்கு எந்தக் கவலையும் இருக்காது. நம்பிக்கையாளர் கஷ்டங்களில் வீழ்கின்ற போது ஒருபோதும் அவர் துயரத்தில் இருக்க மாட்டார். அல்லாஹ்வுக்காக அவர் துன்பங்களை சந்திக்கும்போது அதை துன்பமாக அவர் உணரமாட்டார். மாறாக அந்த நாட்கள் அவருக்கு சுவர்க்கத்தின் நாட்களாக இருக்கும். இறைவனது மலக்குகள் தாய் போன்று அவர்களை தமது மடியில் அமர வைத்துக் கொள்கின்றனர்.

துன்பங்களின் இந்த நாட்களில் அவர்களுக்கு இறைவனுடன் ஒரு சிறந்த தொடர்பு ஏற்பட்டு விடுகின்றது. அந்த தொடர்பின் காரணமாக அல்லாஹ் மலக்குகளுக்கு அப்படிப்பட்ட நபர்களை தமது மடியில் அமர வைக்கும்படி கட்டளையிடுகின்றான்.

இந்த சில விசயங்களை ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் அவ்வப்போது நமக்கு வழங்கியிருந்த போதனைகளிலிருந்து நான் எடுத்துக் கூறியுள்ளேன். நாம் இந்த போதனைகளுக்கேற்ப செயல்பட முயற்சி செய்ய வேண்டும். உங்களது வாழ்க்கையில் இறைவனின் திருப்தியைப் பெறும் வகையிலுள்ள மாற்றத்தை ஏற்படுத்துங்கள்.

நான் ஏற்கனவே கூறியது போன்று இந்த மாநாடு நமது செயல், ஆன்மீகம், மார்க்கம், அறிவு ஆகியவற்றின் நிலையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக நடத்தப்படுகிறது. எனவே, மாநாட்டின் நாட்களில் மாநாட்டின் சூழல், இங்கு நடத்தப்படும் சொற்பொழிவுகள் ஆகியவற்றிலிருந்து கண்டிப்பாக பயனடைய முயற்சி செய்யுங்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் நம்மிடம் பார்க்க விரும்புகின்ற அந்த தரத்தை நாம் பெற்று விட்டோமா என்று உங்களில் ஒவ்வொருவரம் தனது நிலையை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். அப்போதுதான் மாநாட்டில் கலந்து கொண்டதன் மூலமாக நாம் சரியான பலனைப் பெற முடியும். அதன் அருள்களிலிருந்து பயன்பெற முடியும். அவ்வாறில்லையென்றால் இதுவும் உலகில் நடைபெறும் விழாக்கள் போன்ற ஒரு விழாவாகவே இருக்கும். அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்த நோக்கத்தைப் பெற்று கொள்வதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

அமைப்பு ரீதியாக ஒரு விசயம் பற்றி கூற விரும்புகின்றேன். மாநாட்டில் கலந்து கொள்கின்ற ஒவ்வொருவரும் தமது சுற்றுச்சூழலில், அக்கம்பக்கத்தில் தமது பார்வையை வைத்து கண்காணிக்க வேண்டும். இந்த மாநாட்டு சூழலை பாதுகாப்பதும் அவசியமானதாகும். உங்களது பாதுகாப்பிற்கும் இது அவசியமானதாகும். பணியில் இருப்பவர்கள் குறிப்பாக இந்த வழிகாட்டலை நினைவில் வைக்க வேண்டும். டியூட்டி கொடுக்கின்ற போது சிலர் தொழுகைகளைப் பேணுவதன் பக்கம் கவனம் செலுத்தாமல் இருக்கின்றார்கள். தொழுகைகளை நிறைவேற்றுவதற்கான முறையான ஏற்பாடு இருக்க வேண்டும். கண்காணிப்பாளராக இருப்பவர்கள் இதன் பக்கம் கவனமூட்ட வேண்டும். மாநாட்டின் போது எல்லா சகோதரர்களும் அல்லாஹ்வை நினைவு கூர்வதன் பக்கம் கவனம் செலுத்துங்கள். இதுவே மாநாட்டின் ஒரு மிகப்பெரும் நோக்கமாகும். அல்லாஹ் அனைவருக்கும் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT PENNSYLVANIA - JALSA GROUND, USA.**
**ON 29.06.2012**

Translated by : Maulavi M. RAFEEQ AHMAD H.A.
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456